வருடங்களில் எஸ்டாபிளிஷ் பண்ணுவதற்கு ஆர்டர் இருக்கிறது. அப்படி இருந்தும் கடந்த 1992 ஆம் ஆண்டு நிலம் கையகப் படுத்தப்பட்டு அந்த இடம் கேன்சல் ஆகி திரும்பவும் புறம் போக்கு இடம் தேடிக்கொண்டிருக்கிறார்கள். அதேமாதிரி போனால் மிகவும் கால தாமதமாகிறது. ஆகையால் இந்த சப் டிவிஷனை விரைவில் அமைத்து இதோடு தூத்துக்குடியிலே ஜெனரேட் ஆகும் பவர் கிரிட்—ல் கணக்ட் பண்ணுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த துணை மின் நிலையம் அமைக்கும் திட்டத்திற்கு ஒரு கோடியே 20 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. $1\frac{1}{2}$ ஏக்கர் நிலம் கையகப்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மிக விரைவிலே அந்த பணிகள் எல்லாம் துவங்கப்பட்டு துணை மின் நிலையம் விரைவிலே வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த துணை மின் நிலையம் வந்ததற்குப் பின் இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்காது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 410, திரு. என். ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

410—

கொள்ளிடம் ஆற்றில் தரைப்பாலம் அமைத்தல்.

*11804— திரு. என். ஆர். ராஜேந்திரன்,

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தாலுக்கா, முட்டம் கிராமம் வழியாக கொள்ளிடம் ஆற்றின் அக்கரையை கடக்க அணைக் கரையை சேர்ந்த பாலத்தை மக்கள் உபயோகப்படுத்துவதால் தரைப்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 21]

(முற்பகல் 10-50)

திரு. என்.ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தாலுக்கா, முட்டம் கிராமத்தின் அருகில் இந்த கொள்ளிடம் ஆறு பாய்கிறது. இதன் எதிர்திசையான தஞ்சை மாவட்டம் மணல்மேட்டு கிராமத்தை நாங்கள் அடைய வேண்டுமென்றால் காட்டுமன்னார்கோவிலில் இருந்து சுமார் 20கிலோ மீட்டர் தூரத்திலே உள்ள அணைக்கரையை அடைந்து, அங்கிருந்து 25 கிலோ மீட்டர் தூரம் உள்ள மணல்மேட்டை அடைய வேண்டும். ஆகவே, 45 கிலோ மீட்டர் தூரம் நாங்கள் பயணம் செய்யவேண்டியிருக்கிறது. அங்கே ஒரு தரைப்பாலம் அமைத்தால் 7 கிலோ மீட்டர் தூரத்திலே நாங்கள் அந்தக் கிராமத்தை அடைந்துவிடலாம். அதனால் நேரச் செலவும், பெட்ரோல், டீசல் போன்ற செலவும் மிச்சமாகும். ஆகவே, இந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம் அமைப்பதற்கு ஏறத்தாழ 10 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே 10 கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு மேம்பாலம் இருக்கின்ற காரணத்தினால் இவ்வளவு தொகை ஒதுக்கக்கூடிய சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பக்கத்திலே, 10 கிலோ மீட்டர் தூரத்திலே உயர்மட்ட பாலம் இருக்கிறது. போக்குவரத்தும் அவ்வளவு நெரிசலாக செல்வதற்கான வாய்ப்புகள் இல்லை. ஆகவே, இந்த 10 கோடி ரூபாய் அளவிலே கட்ட தற்போது இருக்கின்ற சூழ்நிலையில் இந்தத் திட்டம் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 411, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

411—

எரிசக்தி தொடர்பாக செயல்விளக்க ஊர்தி அமைத்தல்.

*16114—திரு. கா.பூ. முனுசாமி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மரபுசாரா எரிசக்தி தொடர்பாக மாநிலங்களில் செயல் விளக்கத்திற்காக வடிவமைக்கப்பட்ட நடமாடும் திட்ட செயல் விளக்க ஊர்தியைப்போல், தமிழ்நாட்டில் செயல் விளக்கத்திற்காக ஓர் ஊர்தியை உருவாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?